# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2016

ஆண்டு: 7 திகதி: 18-06-16

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி சாந்தி விஜயநாதன்

மாணவர் பெயர்: ______________________________

1 **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு முழு விடை தருக. (20 புள்ளிகள்)**

நான் ஒரு பழைய செய்தி இதழ் ஆவேன். இப்பொழுது மீளாக்கப் பெட்டியுள் கிடக்கிறேன். நேற்றுப் புதிதாக இருந்தேன். பலர் என்னைப் புரட்டிப் புரட்டி வாசித்தனர். இன்று இந்நிலை வந்து விட்டது. எனது பிறப்புப் பற்றி உங்களோடு பேச விரும்புகிறேன்.

எனது பெயர் ‘தாயக முரசு’ ஆகும். நான் அவுஸ்திரேலியாவில் உள்ள செய்தி நிறுவம் ஒன்றில் பிறந்தேன். இந்த நிறுவனம் ஒரு பெருங் கட்டடத்தில் அமைந்துள்ளது. அதன் ஒரு புறத்தில் பெரிய அச்சுப் பொறிகள் இயங்கிக் கொண்டு இருக்கும். மறுபுறத்தில் இதழியலாளர் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டு இருப்பர். தொலைப் படிகளும், மின்னஞ்சல்களும் வந்த வண்ணம் இருக்கும்.

உள்நாட்டுச் செய்திகளும் வரும். வெளிநாட்டுச் செய்திகளும் வரும். சில செய்தி தமிழில் வரும். வேறு சில ஆங்கிலத்தில் வரும். ஆங்கிலத்தில் உள்ளதைச் சிலர் தமிழில் மொழி பெயர்ப்பர். இதழ் ஆசிரியர் செய்திகளை வகைப்படுத்துவார். உரிய படங்களை இணைப்பார். பின்பு தட்டச்சு பகுதிக்கு அனுப்புவார்.

இங்கு செய்திகள் தட்டச்சுச் செய்யப்படும். இதழ் ஆசிரியர் கொடுத்த மாதிரிக்கு அமைய வடிவு அமைக்கப்படும். அடுத்து அச்சுப் பொறிக்கு அனுப்புவர். இந்தப் பொறிகள் பெரும் உருளைகளைக் கொண்டவையாகும். இவை பெரும் ஒலியோடு உருண்டு கொண்டிருக்கும். ஓர் உருளை அச்சு எழுத்துக்களில் மையைத் தடவும். மற்றோர் உருளை வெள்ளைத் தாள்களை அதன்மேல் அழுத்தித் தள்ளும். இப்பொறிகள் எனது எட்டுப் பக்கத்தையும் ஒரே மூச்சில் அச்சிட்டு முடித்து விட்டன. மூன்றாவது பொறி என்னைப் பக்கப்படி ஒழுங்காக அடுக்கியது. பின்பு மடித்து வெட்டியது. அடுக்கி வைத்தது.

இவ்வாறாக நான் பிறந்தேன். என்னோடு ஆயிரக் கணக்கான உடன்பிறப்புகளும் பிறந்தனர். அச்சக ஊழியர் எம்மை வண்டிகளில் ஏற்றினர். நகரிலுள்ள கடைகளுக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு ஒருவர் பணம் கொடுத்து என்னை வாங்கினார். என்னில் இருந்த செய்திகளை வாசித்தார். வீட்டுக்குக் கொண்டு சென்று கட்டுரைகளையும் படித்தார். அவரது மனைவி தொடர்கதைகளைப் படித்தார். மகன் சிறுவர் பகுதியை வாசித்தான். இதன் பின் என்னை மடித்து வைத்தனர். இன்று மீளவாக்கப் பெட்டியுள் போட்டனர். நான் பழைய செய்தி இதழ் ஆகிவிட்டேன்.

1.1 தாயக முரசு இதழ் எங்கே பிறந்தது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

1.2 எவை செய்தி நிறுவனத்திற்கு வந்த வண்ணம் இருந்தன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

1.3 யார் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பர்?

1.4 என்னென்ன மொழிகளில் செய்திகள் வந்தன?

1.5 அச்சுப் பொறிகள் எவற்றைக் கொண்டவை?

1.6 உருளைகள் எவ்வாறு உருண்டு கொண்டிருக்கும்?

1.7 செய்தி இதழ்கள் எங்கே சென்று அடைந்தன?

1.8 செய்தி இதழ் வாங்கியவர் எவற்றைப் படித்தார்?

1.9 அவரது மகன் எந்தப் பகுதியை வாசித்தார்?

1.10 இப்பொழுது செய்தி இதழ் எங்கே கிடக்கிறது?

(2 x 10 = 20 புள்ளிகள்)

**2 கீழே தரப்பட்டுள்ள தனி வாக்கியங்களை தொடர்வாக்கியங்களாக எழுதுக.** (15 புள்ளிகள்)

2.1 (அ) வேலன் பாட்டுப் பாடினான்.

(ஆ) இராமன் பாட்டுப் பாடினான்.

(இ) நாகன் பாட்டுப் பாடினான்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2.2 (அ) தம்பி சுவையான உணவுகளை உண்டான்.

(ஆ) அவன் சிறிது நேரம் இன்னிசைப் பாட்டுப் பாடினான்.

(இ) அவன் தன் தோழரோடு சதுரங்கம் ஆடினான்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2.3 (அ) இராமன் கடலில் அணை கட்டினான்.

(ஆ) அவன் இலங்கை சென்றான்.

(இ) அவன் இராவணனை அழித்தான்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2.4 (அ) சுற்றுப் பயணி பேரங்காடிக்குச் சென்றார்.

(ஆ) அவர் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்.

(இ) அவர் மின்னியல் பொருட்களை வாங்கினார்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2.5 (அ) கண்ணகி தன் கணவன் கொலையுண்டான் என்பதை கேளவிப்பட்டாள்.

(ஆ) அவள் பாண்டிய மன்னனின் அவைக்குச் சென்றாள்.

(இ) அவள் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிரூபித்தாள்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

(3 x 5 = 15 புள்ளிகள்)

**3 உமது குடும்பத்தினர் அவசரமாக வெளிநாடு செல்ல வேண்டி உள்ளது. அக்காலப் பகுதியில் தமிழ்ப்பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களைப் பற்றி உமக்கு அறியத்**

**தருமாறு உமது தமிழ்ப் பாடசாலை நண்பருக்கு 50 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் ஒன்று எழுதுக.** (20 புள்ளிகள்)

4. **பின்வரும் சொற்களை வைத்து நான்கு சொற்களுக்கு குறையாமல் வசனம் எழுதுக.** (20 புள்ளிகள்)

4.1 விருந்தினர்

........................................................................................................................

........................................................................................................................

4.2 ஊடகவியலாளர்

........................................................................................................................

........................................................................................................................

4.3 இணையம்

........................................................................................................................

........................................................................................................................

4.4 பூர்வீகம்

........................................................................................................................

........................................................................................................................

4.5 சாதனையாளர்

........................................................................................................................

........................................................................................................................

4.6 வாங்கினார்

........................................................................................................................

........................................................................................................................

4.7 சட்டத்துறை

........................................................................................................................

........................................................................................................................

4.8 பிறமொழிச் சூழல்

4.9 ஊடகங்கள்

4.10 ஒளிபரப்பப்படுகின்றன.

(2 x 10 = 20 புள்ளிகள்)

**5 நீர் தொலைக்காட்சியில் பார்த்து மகிழ்ந்த படம் ஒன்றின் கதையை அல்லது படித்து மகிழ்ந்த கதையைப் பற்றி 100 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**
(25 புள்ளிகள்)